பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
15 07 2026 WEDNESDAY 6 45 AM
வணக்கம் - மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- பிரிக்ஸ் நாடுகளின் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை அமைச்சர்கள் கூட்டத்தை மத்திய அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா ஹைதராபாதில் இன்று தொடங்கி வைக்கிறார்.

- இந்தியா - ஐரோப்பிய யூனியன் இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்த்தையை முன்னெடுத்துச் செல்வது குறித்து, பெல்ஜியம் துணை பிரதமருடன், மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் ஆலோசனை நடத்தினார்.

- திருப்பூர் மாவட்டம், அ அணையிலிருந்து இன்று முதல் ஆறு நாட்கள் தண்ணீர் திறந்துவிட தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

- தமிழகத்தில் அடுத்த 4 நாட்களுக்கு வறண்ட வானிலையே நிலவும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

- இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், இந்தியா 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

>>>>>><<<<<<

பிரிக்ஸ் நாடுகளின் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை அமைச்சர்கள் கூட்டத்தை மத்திய அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா ஹைதராபாதில் இன்று தொடங்கி வைக்கிறார்.

இரண்டு நாட்கள் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில், பிரிக்ஸ் அமைப்பில் இடம்பெற்றுள்ள நாடுகளின் தலைவர்கள் மற்றும் உயரதிகாரிகள் கலந்து கொள்கின்றனர்.

புதுமை கண்டுபிடிப்பு, மீள்திறன், ஒத்துழைப்பு மற்றும் ஸ்திரத்தன்மை என்ற கருப்பொருளுடன் இந்த கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தைத் தொடர்ந்து பிரிக்ஸ் நாடுகளின் வேலைவாய்ப்பு, பணிக்குழுக் கூட்டமும் நடைபெறவுள்ளது.

சமூக பாதுகாப்பு மற்றும் தொழில்துறையில் மகளிரின் பங்களிப்பை அதிகரித்தல், மகளிருக்கு அதிக வேலைவாய்ப்புகளை வழங்குதல் போன்ற பல்வேறு விஷயங்கள் குறித்து இந்தக் கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்படவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<

தொழிலாளர் ஈட்டுறுதி காப்பீட்டுக் கழகத்தின் கீழ் பயனடைவோர் எண்ணிக்கை 15 கோடியாக அதிகரித்துள்ளது என்று மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர், வல்லம் சிப்காட் தொழிற்பேட்டையில் 100 படுக்கைகளுடன் கூடிய ESI மருத்துவமனையை நேற்று காணொலி வாயிலாக திறந்து வைத்து அவர் பேசினார்.

கடந்த 12 ஆண்டுகளுக்கு முன்னர், ESI பயனாளிகளின் எண்ணிக்கை 7 கோடியே 50 லட்சமாக இருந்தது என்றும். தற்போது இந்த எண்ணிக்கை இரு மடங்காக அதிகரித்துள்ளது என்றும் அவர் கூறினார்.

இதுபோன்ற மருத்துவமனைகள் அதிக தரத்துடன் செயல்படுவதன் மூலம், தொழிலாளர்களுக்கு உயர்தர சிகிச்சை கிடைப்பதாகவும் திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்தார்.

>>>>>><<<<<<

இந்தியா - ஐரோப்பிய யூனியன் இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்த்தையை முன்னெடுத்துச் செல்வது குறித்து, பெல்ஜியம் துணை பிரதமர் David Clarinval-லுடன் மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் ஆலோசனை நடத்தினார்.

ஸ்பெயின் பயணத்தை நேற்று நிறைவு செய்த அவர், பெல்ஜியம் தலைநகர் Brussels சென்றடைந்தார்.

அங்கு பெல்ஜியம் துணைப் பிரதமரும், வேலைவாய்ப்பு, பொருளாதாரம் மற்றும் வேளாண் துறை அமைச்சருமான David Clarinval-ஐ சந்தித்து, வர்த்தகம், முதலீடு, தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து விரிவான ஆலோசனை நடத்தினார்.

இருநாடுகளுக்கும் பரஸ்பர நலன்களை அளிக்கக்கூடிய பொருளாதார உறவுகளை மேலும் வலுப்படுத்துவதென இருதலைவர்களும் அப்போது உறுதி அளித்தனர்.

*தொடர்ந்து ஐரோப்பிய யூனியன் வேளாண் மற்றும் உணவுத் துறைக்கான ஆணையர் Christophe Hansen-ஐயும் திரு. பியூஷ் கோயல் சந்தித்து, பருவநிலை மாற்றம், பசுமை எரிசக்தி உள்ளிட்ட விஷயங்கள் குறித்து தமது கருத்துக்களை பரிமாறிக்கொண்டார்.*

>>>>>><<<<<<

*வியட்நாம் படகு விபத்தில் உயிரிழந்தவர்களில் 3 பேரின் உடல்கள் நேற்று திருச்சி கொண்டு வரப்பட்டது.*

*இந்த விபத்தில் உயிரிழந்த 15 இந்தியர்களில் 10 பேர் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள்.*

*திருச்சி, கிராப்பட்டியைச் சேர்ந்த அழகுராஜன், திருவாணைக்காவலைச் சேர்ந்த பாலாஜி, பீமநகரைச் சேர்ந்த ஷேக்அப்துல்லா ஆகியோரின் உடல்கள் கோவை விமான நிலையத்திற்கு கொண்டுவரப்பட்டு, அங்கிருந்து அவர்களது இல்லங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.*

*அவர்களின் உடல்களுக்கு, சட்டப்பேரவை துணைத்தலைவர் திரு. ரவிசங்கர் அஞ்சலி செலுத்தினார்.*

>>>>>><<<<<<

*திருப்பூர் மாவட்டம், அமராவதி அணையிலிருந்து இன்று முதல் தண்ணீர் திறந்துவிட தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.*

*அம்மாவட்ட மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில். வரும் 21ஆம் தேதி வரை, அதிகபட்சமாக 414 மில்லியன் கனஅடி அளவுக்கு தண்ணீர் திறந்து விட அனுமதி அளிக்கப்பட்டிருப்பதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.*

>>>>>><<<<<<

*நெல்லை மாவட்டம், பாபநாசம் அருகே, மேற்குத்தொடர்ச்சி மலை அடிவாரப் பகுதிகளில் இரவு நேரங்களில் கரடிகள் நடமாட்டம் நீடித்து வருகிறது.*

*இதுவரை 3 கரடிகளை வனத்துறையினர் பிடித்துள்ள போதும், மேலும் ஒரு கரடி உலவி வரும் நிலையில் அதனையும் வனத்துறையினர் பிடிக்க வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*(வாய்ஸ் பைட் – திருமலைக்குமார் 44 செகண்ட்ஸ்)*

>>>>>><<<<<<

*தமிழகத்தில் அடுத்த 4 நாட்களுக்கு வறண்ட வானிலையே நிலவும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

மேற்கு திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக, தமிழகத்தின் மேற்குத்தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் வட தமிழகத்தில் அடுத்த இரண்டு நாட்களுக்கு ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை மைய அறிக்கை கூறுகிறது.

ஏனைய மாவட்டங்கள் மற்றும் உள் தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் வரும் 17ஆம் தேதி முதல் 20ஆம் தேதிவரை லேசான மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில், வெப்பநிலையை பொறுத்தவரை அடுத்த 5 நாட்களுக்கு 2 முதல் 4 டிகிரி செல்சியஸ் வரை அதிகரிக்கக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

>>>>>><<<<<<

இருவரிச் செய்திகள்

*Kyiv* நகரை குறிவைத்து தாக்குதலில் ஈடுபட்ட ரஷ்ய ஏவுகணைகளை இடைமறித்து முறியடித்ததாக யுக்ரைன் தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

*Hormuz* நீரிணையில் கப்பல்களுக்கு 20 சதவீத கட்டணம் வசூலிக்கும் முடிவை, அமெரிக்க அதிபர் டோனல்ட் ட்ரம்ப் திரும்பப் பெற்றுள்ளார்.

>>>>>><<<<<<

இந்தியா மாலத்தீவு இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான முதல் சுற்று பேச்சுவார்த்தை வெற்றிகரமாக நிறைவடைந்தது.

>>>>>><<<<<<

சட்டவிரோத ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்து கடத்தல் கும்பலைச் சேர்ந்த 3 பேரை பஞ்சாப் காவல்துறையினர் நேற்று கைது செய்துள்ளனர்.

>>>>>><<<<<<

பீகார் மாநிலம், அராரியா மாவட்டத்தில் தொழிலாளர்களை ஏற்றிச் சென்ற டிராக்டர் கவிழ்ந்த விபத்தில் 3 பெண்கள் உயிரிழந்தனர்.

>>>>>><<<<<<

அரியலூர் மாவட்ட தோட்டக்கலைத் துறை சார்பில் மத்திய மாநில அரசின் மானிய திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்டு செயல்பட்டு வரும் முந்திரி உடைக்கும் தொழிற்சாலைகளை ஆட்சியர் திருமதி. *Mirunalini* பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

>>>>>><<<<<<

சேலம் - பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில் காற்றலை விசிறி ஏற்றிச் சென்ற லாரி பழுதடைந்த காரணத்தால், அந்த வழியாக சுமார் ஒரு மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

>>>>>><<<<<<

தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் ஆடித் தபசு திருவிழாவை முன்னிட்டு, வரும் 28ஆம் தேதி உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் கடந்த இரண்டு ஆண்டுகளில், பொதுமக்களுக்கு இடையூறாக சுற்றித் திரிந்த கால்நடைகளின் உரிமையாளர்களிடமிருந்து ஒரு கோடியே 24 லட்சம் ரூபாய் அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

விளையாட்டுச் செய்திகள்

இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், இந்தியா 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

பர்மிங்காமில் நடைபெற்ற இப்போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட் செய்த இங்கிலாந்து அணி 47 புள்ளி ஐந்து ஓவரில் 258 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

259 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய இந்தியா, 45 புள்ளி இரண்டு ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 262 ரன் எடுத்து வெற்றிபெற்றது.

கேப்டன் சுப்மன் கில் 80 ரன் எடுத்திருந்தபோது, காயம் காரணமாக வெளியேறினார்.

வாஷிங்டன் சுந்தர் 52 ரன்னும், அக்ஸர் பட்டேல் 57 ரன்னும் எடுத்து வெற்றிக்கு வழிவகுத்தனர்.

>>>>>><<<<<<

உலக கோப்பை கால்பந்துப் போட்டியில் ஸ்பெயின் இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளது.

டெக்ஸாலில் நேற்று நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் ஸ்பெயின் அணி 2-0 என்ற கோல்கணக்கில் பிரான்ஸை வென்றது.

*அர்ஜென்டினா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையே இன்று நடைபெறும் இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் வெற்றிபெறும் அணியுடன், இறுதிப்போட்டியில் ஸ்பெயின் விளையாடும்.*

*>>>>>><<<<<<*

*18 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய கோப்பை மகளிர் கூடைப்பந்து காலிறுதிப் போட்டியில், இந்தியா இன்று இந்தோனேஷியாவை எதிர்கொள்கிறது.*

*இப்போட்டி பிற்பகல் மணி 2.30-க்கு பாங்காக்கில் நடைபெறவுள்ளது.*

*>>>>>><<<<<<*